72, Park Street, Colombo 2, Sri Lanka
Tel: +94 11 231 4041/2/3/5 Fax: +94 11 231 4040
e-mail: info@ihp.lk web: www.ihp.lk twitter: @ihplk

# PRESS RELEASE

## திகதி வரை தடையாணை

திகதி : 14 ஆகஸ்ட் 2023
நேரம் : 12:01 AM Sri Lanka Time



## மேலும் தகவல்களுக்கு அணுகவும்

டல்ரீன் பாத்லாட்
மின்னஞ்சல்: dalreen `at' ihp.lk


## பிரதான ஆராய்ச்சியாளருடன் தொடர்புகொள்ள

மருத்துவர். ரவி ரன்னன்-எலிய
மின்னஞ்சல் : ravi `at' ihp.lk Twitter: @ravirannaneliya


# இலங்கை நுகர்வோர் நம்பிக்கை: *ஜூலை மாதத்தில் நுகர்வோர் நம்பிக்கையில் குறிப்பிடத்தக்க மாற்றம், ஆனால் நம்பிக்கையற்ற நிலை தொடர்கின்றது*

### *எதிர்கால மற்றும் தற்போதைய நிலைமை பற்றிய பொது எண்ணம் தொடர்ந்து மேம்படுவதுடன் அனைத்து சுட்டெண்களும் நம்பிக்கையின்மை மட்டத்தில் தங்கியுள்ளன.*

இலங்கை சுகாதார கொள்கை நிறுவனம் (IHP) தனது இலங்கை கருத்துக்கணிப்பு ஆய்வின் மூலம் கணிக்கப்படும் நுகர்வோர் நம்பிக்கை சுட்டெண்களின் ஜூலை 2023 புதுபிப்பை இன்று வெளியிட்டது.



பொதுமக்களுக்கு அவர்களின் தனிப்பட்ட பொருளாதார நிலை மற்றும் தேசிய பொருளாதாரம் பற்றிய எண்ணத்தின் பரந்த அளவீடான நுகர்வோர் எண்ணம் சுட்டெண்(ICS), ஜூலை மாதத்தில் 6 புள்ளிகள் அதிகரித்து 30 புள்ளிகள் ஆனது. அக்டோபர் 2021க்குப் பிறகு பதிவுசெய்யப்பட்ட அதிகமான மதிப்பு இதுவாகும். ICSன் வீச்சு பூஜ்ஜியத்திலிருந்து அதிகபட்சம் 100 வரை, மேலும் மட்டம் 50ற்கு கீழ் இருந்தால் நிகர நம்பிக்கையின்மை அதாவது அவநம்பிக்கை நிலையை குறிக்கும்.

எதிர்காலத்தைப்பற்றிய அபிப்பிராயத்தை அளவிடும் நுகர்வோர் எதிர்பார்ப்பு சுட்டெண் (ICE), 6 புள்ளிகள் உயர்ந்து 37 புள்ளிகளுடன் புதிய உச்சத்தை அடைந்தது. இது நாட்டின் நீண்டகால எதிர்காலம் மற்றும் தனிப்பட்ட பொருளாதார நிலை பற்றிய பொதுமக்களின் எதிர்பார்ப்பில் சற்று குறைவான நம்பிக்கையின்மை அளவினை குறிக்கின்றது. தற்போதைய நிலவரம் பற்றிய எண்ணத்தை அளவிடும் தற்போதைய நிலவர சுட்டெண் (ICC) சற்று மீண்டு 7 புள்ளிகள் அதிகரித்து 20 புள்ளிகள் ஆனது.

**கடந்த மாதத்தில் IHP நுகர்வோர் நம்பிக்கை அளவையில் மாற்றங்கள்**

| அளவை | ↓↑↔ | ஜூலை 2023 | ஜூன் 2023 | மே 2023 | ஏப்ரல் 2023 | மார்ச் 2023 | பிப்ரவரி 2023 | ஜனவரி 2023 | டிசம்பர் 2022 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| நுகர்வோர் எண்ணம் சுட்டெண் (ICS) | ↑ 6 | **30** | **24** | 25 | 26 | 17 | 12 | 15 | 16 |
| நுகர்வோர் எதிர்பார்ப்பு சுட்டெண் (ICE) | ↑ 6 | **37** | **31** | 33 | 35 | 22 | 17 | 22 | 22 |
| தற்போதைய நிலவர சுட்டெண் (ICC) | ↑ 7 | **20** | **13** | 12 | 13 | 9 | 6 | 5 | 8 |
| தனிப்பட்ட நிதி நிலைமை (கடந்த 12 மாதம்) | ↑ 3 | **19** | **16** | 16 | 15 | 11 | 5 | 6 | 8 |
| தனிப்பட்ட நிதி நிலைமை (வரும் 12 மாதம்) | ↑ 12 | **43** | **31** | 28 | 35 | 23 | 20 | 23 | 22 |
| நாட்டின் நிலைமை (வரும் 12 மாதம்) | ↓ 3 | **25** | **28** | 30 | 27 | 18 | 12 | 16 | 18 |
| நாட்டின் நீண்டகால வாய்ப்புகள் (வரும் 5ஆ.) | ↑ 10 | **44** | **34** | 41 | 43 | 26 | 19 | 28 | 26 |
| தற்போதைய வாங்குதல் நிபந்தனைகள் | ↑ 9 | **20** | **11** | 8 | 10 | 6 | 6 | 3 | 8 |

சுகாதார கொள்கை நிறுவனம் இலங்கை கருத்துக்கணிப்பு ஆய்வு
டிச. 01 2022- ஜூலை 31 2023 வரை SLOTS நடத்திய 4,495 நேர்காணல்களின் அடிப்படையில் மதிப்பீடுகள் கணக்கிடப்பட்டன. பாலினம், வயது, இனம், கல்வி, துறை, மாகாணம் மற்றும் சமூக பொருளாதார நிலை ஆகியவற்றின் அடிப்படையில் தேசிய அளவில் பிரதிநிதித்துவப்படுத்துமாறு பதில்கள் எடையிடப்பட்டு மாதாந்திர மதிப்பீடுகள் கணக்கிடப்பட்டன.

முழு அறிக்கை ihp.lk விலிருந்து கிடைக்கும்

Institute for Health Policy, August 2023, “Consumer confidence increases slightly in July, although remaining at pessimistic levels”, SLOTS Report #2023-13. *Available at:* http://ihp.lk/publications/docs/SLOTSReport202313.pdf

முன்பு வெளியான அறிக்கைகள் ihp.lk விலிருந்து கிடைக்கும்

Institute for Health Policy, July 2023, “Consumer confidence changed little in June, remaining at pessimistic levels”, SLOTS Report #2023-12. *Available at:* http://ihp.lk/publications/docs/SLOTSReport202312.pdf

Institute for Health Policy, June 2023, “Sri Lanka Consumer Confidence: Consumer confidence changed little in May despite gains in April”, SLOTS Report #2023-11. *Available at:* http://ihp.lk/publications/docs/SLOTSReport202311.pdf

Institute for Health Policy, March 2022, “SLOTS Consumer Confidence Survey: Methodology for tracking consumer sentiment in Sri Lanka”, SLOTS Report #2022-01. *Available at:* https://ihp.lk/publications/docs/SLOTSReport202201.pdf

**IHP பற்றி**

IHP கொழும்பு, இலங்கையில் உள்ள சுயாதீனமான மற்றும் கட்சிசார்பற்ற ஆய்வு மையம். SLOTS ஆய்வின் பிரதான ஆய்வாளர் மருத்துவர் ரவி ரன்னன்-எலிய ஆவார். இவர் பொது கருத்துக்கணிபுகளில் ஹார்வார்ட் பல்கலைக்கழகத்தில் பயிற்சி பெற்றதோடு மூன்று தசாப்தங்களாக பல்வேறு ஆய்வுகளை நடத்திவருகிறார்.

**முறை**

முன்தேர்வு இல்லாமல் எழுமாற்றமாக தேர்ந்தெடுத்த கைப்பேசி எண்களின் மூலம் தொடர்புகொண்டு சேர்க்கப்பட்ட வயதுவந்தவர்களின் (18 வயதிற்கு மேற்பட்டவர்கள்) மாதிரியில் இருந்தும் மற்றும் எழுமாற்ற மாதிரி தெரிவு முறையின் மூலம் முறைப்படி தெரிவு செய்யப்பட்ட ஒர் தேசிய பதிலளிப்பவர் பேனலிலிருந்தும் நேர்கானல்களை SLOTS ஒருங்கிணைக்கிறது. தேசிய சனத்தொகையின் வயது, பால்நிலை, மாகாணம், துறை, சமூகபொருளாதார நிலை, இனக்குழு மற்றும் கல்வியோடு மாதிரி பொருந்துமாறு அனைத்து மதிப்பீடுகளும் எடையிடப்பட்டன.

நிதியுதவி

இலங்கையில் நீலன் திருச்செல்வம் அறக்கட்டளை, ஐக்கிய ராஜியத்தின் உடல்நலம் மற்றும் பராமரிப்பு ஆராய்ச்சிக்கான தேசிய நிறுவனம் (UK NIHR) ஆசியா மன்றம்(The Asia Foundation) மற்றும் ஏனையோர் SLOTS ஆய்விற்கு நிதியுதவி அளித்துள்ளனர். ஆனால் ஆய்வின் வடிவமைப்பிலோ, பகுப்பாய்விலோ மற்றும் கண்டுபிடிப்புகளின்

பொருள்விளக்கத்திலோ ஆதரவாளர்கள் பங்கு வகிக்கவில்லை. மேலும் விவரமான தரவுகள் மற்றும் முடிவுகளை பெற விரும்பும் நபர்கள் IHP உடன் தொடர்பு கொள்ளலாம்.